## புதுச்சேரி வேளாண்பணி மற்றும் தொழிற்கழகம்

(ஒரு புதுவை அரசு நிறுவனம்)

## வேளாண் அகம் தட்டாஞ்சாவடி புதுச்சேரி

கோப்பு எண்: I-A/PASIC/GC-PKKVK/2022-23

தேதி: 13 SEP 2022

### பொது ஏல அறிவிப்பு

புதுச்சேரி பாசிக் நிறுவனத்திற்கு சொந்தமான அரசூர் தோட்டக்கலை பண்ணை, கருவடிக்குப்பம் தோட்டக்கலை பண்ணை, மற்றும் PKKVK வின் உரம் தயாரிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் விழுந்த மரங்களை அந்தந்த இடத்திலேயே 12.09.2022 தேதி அன்று ஏலம் விடுவதற்கான ஒப்பந்த புள்ளிகள் (1 டன் விலை மட்டும்) மேற்கூறிய மூன்று இடத்திற்கும், தனித்தனியே வரவேற்க்கபடுகின்றன. ஒப்பந்த புள்ளிகளை 09.09.2022 தேதி மாலை 4.00 மணி வரை தபால் மூலமோ அல்லது நேரிலோ மேற்கூறிய பாசிக் தலைமை அலுவலகத்தில் சமர்பிக்கலாம்.

2. பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் 12.09.2022 தேதியன்று காலை 9.30 மணிக்கு கல்மேடுபேட்டில் PKKVK வின் உரம் தயாரிக்கும் மையத்திலும் 10.30 மணிக்கு பாசிக் அரசூர் தோட்டக்கலை பண்ணையிலும் மற்றும் 12.00 மணியளவில் பாசிக் கருவடிக்குப்பம் தோட்டக்கலை பண்ணையிலும் உள்ள அலுவலகத்தில் ஏல நிர்ணய குழு முன்னிலையில் ஏலம் விடப்படும்

3. ஏலதாரர் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளியில் கோரிய ஏல கேட்பு தொகையானது (1 டன் விலை) அலுவலகத்தினால் நிர்ணயக்கப்பட்ட குறைந்தபட்ச ஏல மதிப்பு தொகையை விட குறைவாக இருந்தால் அந்த இடத்திலேயே வாய்மொழி ஏலம் விடப்பட்டு அதன் மூலம் ஏலத்தொகை நிர்ணயிக்கப்படும்.

4. ஏலம் எடுத்தவர் முழு தொகையையும் ஏலம் எடுத்தவுடனேயே அலுவலகத்தில் செலுத்தி ரசிது பெற்றுக்கொள்ளவேண்டும் ஏலம் எடுத்தவர் அலுவலக உத்தரவு கடிதம் பெற்ற பிறகு அடுத்த 24 மணி நேரத்திற்குள் அலுவலக நேரத்தில் மரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பு

(i) ஏலம் எடுத்தவர் முழுத்தொகையையும் உடனே கட்டத் தவறினால் அவர் எடுத்த ஏலம் உடனே ரத்து செய்து அந்த மரங்களை மறு ஏலம் விடப்படுவதற்கான செலவையும் ஏற்க வேண்டும். தேவைப்பட்டால் இம்மரங்களுக்கான மதிப்பு விலையை நிற்வாகத்துக்கு செலுத்த வேண்டியிருக்கும்.

(ii) நிர்வாகம் தேவைப்பட்டால் எவருக்கும் எக்காரணத்தையும் கூறாமலும் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஏலத்தை நிறுத்தவோ அல்லது விலக்கவோ உரிமை பெற்றுள்ளது.

(iii) ஏலம் முடிந்தவுடன் ஏலம் விடப்பட்ட மரங்களின் பாதுகாப்பு அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரரையே சேரும்.

(iv) ஏலம் முடிந்தவுடன் ஏலம் விடப்பட்ட மரங்களின் தரம் மற்றும் மதிப்பு பற்றி இந்த அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது.

| வ.எண் | இடம் | தேதி | ஏலப்பொருட்கள் |
|---|---|---|---|
| 1. | PKKVK உரம் தயாரிக்கும் மையம் கல்மேடுபேட் | 12.09.2022 காலை 9:30 | விழுந்த வேப்ப மரங்கள் சவுன்டல் மற்றும் வேளிகாத்தன் மற்றும் இதர மரங்கள் |
| 2. | பாசிக் அரசூர் தோட்டக்கலை பண்ணை | 12.09.2022 காலை 10:30 | |
| 3. | பாசிக் கருவடிக்குப்பம் தோட்டக்கலை பண்ணை | 12.09.2022 12:00 மணி | |

மேலாண் இயக்குநர்.